Q.C-143

## DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)

| **Name of the Test:** | Social Welfare Departmental Examination Paper –V- Advanced Law (With Books) | 177 |
|---|---|---|

Maximum Time: 2.30 Hour Maximum Marks: 100

## ***IMPORTANT INSTRUCTIONS***

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 100 number of questions in objective Type.
இந்தக் கணினி வழித் தேர்வானது, 100 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.

2. Answer all questions. Each question carries one mark
அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.

3 In case of doubt, English version is the Final.
வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.

5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

**b)** Time available for you to complete the examination will be displayed through a countdown timer in the top right-hand corner of the screen. It will display

1. Identify the Punishment which is not prescribed under the category of Punishment in the Indian Penal Code?
இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் பரிந்துரைக்கப்படாத தண்டனையை கண்டறிக

(A) Death
மரணம்

(B) Imprisonment for life
ஆயுள் சிறை

(C) Simple imprisonment with hard labour
சாதாரண சிறை உடன் கூடிய கடினமான வேலை

(D) Forfeiture of property
சொத்தை பறிமுதல் செய்தல்

2. Which one of the following punishment is non-existence under the provisions of the Indian Penal Code?
கீழ்க்கண்டவற்றில் எந்தவொரு தண்டனையானது தற்போது இந்திய தண்டனைச் சட்டத்தில் நடைமுறையில் இல்லை

(A) Imprisonment for life
ஆயுள் சிறை

(B) Forfeiture of property
சொத்தை பறிமுதல் செய்தல்

(C) Fine
தண்ட அபராதம்

(D) Transportation for life
ஆயுள் கால நாடுகடத்துதல்

3. Under which provision of the I.P.C. appropriate Government may commute the punishment of imprisonment for life?
ஆயுட்கால சிறை தண்டனை குறைப்பு செய்யும் அதிகாரத்தை அரசுக்கு அளிக்கும் இ.த.ச. சட்ட பிரிவு எது?

(A) Section – 52
பிரிவு 52

(B) Section – 53
பிரிவு 53

(C) Section – 54
பிரிவு 54

(D) Section – 55
பிரிவு 55

4. Under the IPC, power of commutation of sentence of death vested in
இ.த.ச. படி மரண தண்டனையை குறைக்கும் அதிகாரம் உடைய அமைப்பு

(A) The President of India
இந்திய குடியரசு தலைவர்

(B) The Governor of State
மாநில ஆளுநர்

(C) The Appropriate Government
தகுதியுடைய அரசு

(D) All the above
மேற்கண்ட எல்லாம்

5. Imprisonment for life means imprisonment for
ஆயுட்கால சிறை எனப்படுவது யாதெனில்

(A) 20 years
20 வருடங்கள்

(B) 30 years
30 வருடங்கள்

(C) 14 years
14 வருடங்கள்

(D) Whole of the remaining life
மீதமுள்ள ஆயுள் முழுவதும்

6. Whoever wages war against the Government of India or attempts to wage such war shall be punished with?
இந்திய அரசுக்கு எதிராக போர் தொடுக்க அல்லது அதற்கான முயற்சியில் இறங்க கூடிய நபர்களை தண்டிப்பது

(A) Imprisonment upto 14 years with fine
14 வருட சிறையும் அபராதமும்

(B) Death or imprisonment of life with fine
மரண தண்டனை அல்லது ஆயுட்சிறையும் அபராதமும்

(C) Imprisonment up to 10 years with fine
10 வருட சிறையும் அபராதமும்

(D) Imprisonment up to 7 years with fine
7 வருட சிறையும் அபராதமும்

7. Conspiracy to wage war against Government of India has been dealt with under section ____________ of the Indian Penal Code.
இந்திய அரசுக்கு எதிராக போர் தொடுக்க சதி ஆலோசனையில் ஈடுபடுவது இ.த.ச. பிரிவு ―――――― ன் கீழ் குற்றம்.

(A) 120 (B) 120 A
(C) 120 B (D) 121 A

8. Find out wrong composition.
தவறான பொருத்தத்தை கண்டறிக.

(i) Section – 122 – I.P.C. – Collecting arms etc.
பிரிவு-122 இ.த.ச. ஆயுதங்கள் சேகரிப்பு

(ii) Section –126 IPC – Committing depredation of peace.
பிரிவு-126 இ.த.ச.-அமைதி குலைவை ஏற்படுத்துவது

(iii) Section – 121 A – Conspiracy to wage war.
பிரிவு-121 A இ.த.ச அரசுக்கெதிராக போர்தொடுக்க சதி

(iv) Section – 124 A IPC – Waging war.
பிரிவு-124 A இ.த.ச. அரசக்கெதிரான பகைமூட்டல்

(A) (ii) only
(ii) மட்டும்
(B) (iii) and (iv)
(iii) மற்றும் (iv)
(C) (iv) only
(iv) மட்டும்
(D) (iii) only
(iii) மட்டும்

9. The essence of sedition is
ராஜ/அரச துவேஷம் என்பதன் அடிப்படை உட்கூறு

(A) Intention
கெட்ட உள் எண்ணம்
(B) Benefits (or) gains of the accused
குற்றம் சுமத்தப்படுபவர்க்கு கிடைக்கும் நன்மை
(C) Result
முடிவு
(D) Both intention and results
உள்ளெண்ணம் மற்றும் முடிவு இரண்டும்

10. Which of the following is not an offence under I.P.C. neither against human body nor property namely the offence of?
கீழ்க்கண்ட எந்தவொரு குற்றம் இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் உடலுக்கெதிரான குற்றமாகவோ சொத்துக்கெதிரான குற்றமாகவோ வகைபடுத்தப்படவில்லை

(A) Cheating
ஏமாற்றுதல்

(B) Murder
கொலை

(C) Robbery
கொள்ளை

(D) Sedition
ராஜதுரோகம்

11. A private doctor running his own clinic, refuses to provide medical treatment to B, B is a victim of acid attack. It is an offence under section ___________ I.P.C.
தனியாக மருத்துவ சேவை வழங்கும் மருத்துவர் ஒருவர் 'B' என்ற நபர்க்கு மருத்துவசேவை வழங்க மறுக்கிறார். 'B' அமில வீச்சால் பாதிப்படைந்தவர் இது இ.த.ச. பிரிவு ———— ன் கீழ் குற்றம்

(A) 166

(B) 166 A

(C) 166 B

(D) 167

12. X, a public servant, having charge of translation of a document, makes an incorrect translation of a document with an intent to cause injury to 'B'. the offence committed by 'X' is punishable under section ———— of IPC.
X என்ற பொது அதிகாரி ஓர் ஆவணத்தை மொழிபெயர்க்கும் பொழுது 'B' என்ற நபருக்கு தீங்கு விளைய வேண்டும் என்ற எண்ணத்துடன் தவறாக மொழிபெயர்த்தால் 'X' செய்த குற்றமானது. இ.த.ச பிரிவு ———— ன் கீழ்தண்டனைகுறியது

(A) 161

(B) 162

(C) 166

(D) 167

13. Personating a Public servant is an offence under section ___________ of I.P.C.
பொது ஊழியரைப் போல பாசாங்கு செய்வது இ.த.ச. ———— பிரிவின் கீழ் குற்றமாகும்

(A) 186

(B) 171

(C) 170

(D) 169

14. A, a landlord, knowing of a murder committed within the limits of his estate, willfully misinforms the Magistrate of the District that the death has occured by accident in consequence of the bite of a snake. 'A' is guilty of the offence under section ___________ IPC.
'A' நிழக்கிழார், தம்முடைய சொத்தில் ஓர் கொலை நடந்ததை மறைத்து பாம்பு கடித்ததால் இறந்ததாக வேண்டுமென்றே தவறான தகவலை மாவட்ட நடுவருக்கு அளிக்கிறார் 'A' செய்தது இ.த.ச. பிரிவு ———— படி குற்றம்.

(A) 177
(B) 179
(C) 178
(D) 182

15. 'A' being legally bound to produce a document before a District Court. Intentionally omits to produce the same. A has committed the Offence Under Section ___________ of I.P.C.
'A' என்பவர் சட்டபடியாக மாவட்ட நீதிமன்றத்தில் ஓர் ஆவணத்தை சமர்பிக்க கடமைப்பட்டவர். அவர் கெட்ட உள்ளெண்ணத்துடன் அதை சமர்பிக்காமல் தவிர்த்து வருகிறார். 'A' இ.த.ச. வின் கீழ் செய்த குற்றமானது ———— பிரிவின் கீழ்வரும்

(A) 177
(B) 173
(C) 174
(D) 175

16. Offences against human body are provided under which of the following chapter of I.P.C?
மனித உடலுக்கு எதிரான குற்றங்கள். இ.த.ச. வின் எந்த அத்தியாயத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது

(A) Chapter XI
அத்யாயம் XI
(B) Chapter XII
அத்யாயம் XII
(C) Chapter XIII
அத்யாயம் XIII
(D) Chapter XVI
அத்யாயம் XVI

17. Which one of the following statement is correct?
கீழ்க்கண்டவற்றில் எது சரியானது?

(i) Every, culpable homicide is murder
எல்லா மரணம் விளைவிக்கும் செய்கையும் கொலை ஆகும்

(ii) Death caused by negligent act is murder
கவனமின்மையால் விளையும் மரணம் கொலை ஆகும்

(iii) Every murder is culpable Homicide
எல்லாவிதமான கொலையும் மரணம் விளைவிக்கும் செய்கையாகும்

(A) (i) is correct
(i) மட்டும் சரி

(B) (ii) only correct
(ii) மட்டும் சரி

(C) (iii) only correct
(iii) மட்டும் சரி

(D) All the above correct
அனைத்தும் சரி

18. Causing of the death of Child in Mother's womb is
தாயின் வயிற்றிலேயே கருவை மரணிக்க செய்வது என்பது

(A) Culpable Homicide
மரணம் விளைவிக்கும் செய்கை

(B) Murder
கொலை

(C) Miscarriage
கருக்கொலை

(D) Infanticide
குழந்தை கொலை

19. 'A' knows 'Z' to be behind the bush. 'B' does not know it. 'A' induces 'B' to fire at the bush. Knowing it is likely to cause Z's death. Z dies. 'A' is a guilty of
புதருக்கு பின் Z அமர்ந்திருப்பது A அறிவார். B அது குறித்து எதுவுமறியார். 'A', 'B' யை புதரை நோக்கி சுட தூண்டுகிறார், அதனால் Z மரணமடைவார் என A க்கு தெரியும். Z மரணிக்கிறார். 'A' செய்த குற்றமானது.

(A) Abetment to murder
கொலைக்கு உடந்தையாயிருந்தது

(B) Culpable Homicide
மரணம் விளைவிக்கும் செய்கை

(C) Attempt to murder
கொலை முயற்ச்சி

(D) None of these
மேற்கண்ட எதுவுமில்லை

20. 'A' murder the influence of grave provocation by 'Z' kills 'Y' Z's child. A is guilty of
Z ன் ஆத்திர மூட்டும் செய்கையால் 'A' என்பவர் Z ன் குழந்தையான 'Y' ஐ கொன்றுவிடுகிறார் 'A' செய்த குற்றமாவது.

(A) Culpable Homicide
மரணம் விளைவிக்கும் செய்கை

(B) Murder
கொலை

(C) Grievous hurt
கொடுங்காயம் விளைவித்தல்

(D) No offence as he was under provocation
ஆத்திர மூட்டும் செய்கையினால் விளைந்ததால் யாதொரு குற்றமும் இல்லை

21. Killing of human being by another human being is called
ஓர் மனிதன் மற்றொரு மனிதனைக் கொல்வது எவ்வாறு அழைக்கப்படும்

(A) Murder
கொலை

(B) Culpable homicide
மரணம் விளைவிக்கும் செய்கை

(C) Homicide
மனிதனைக் கொல்வது

(D) Assassination
அரசியல் காரணங்களுக்கான கொலை

22. Under which one of the following provisions of the Indian Penal Code, causing death of child in the mother's womb is not homicide?
கீழ்கண்டவற்றில் இ.த.ச. வின் எந்த சட்ட வகையமானது தாயின் கருவில் இருக்கிற சிசுவை கொல்வது "மனிதக் கொலை" ஆகாது என விளம்புகிறது.

(A) Explanation I of Section 299
பிரிவு 299 விளக்கம்-I

(B) Explanation II of Section 299
பிரிவு 299 விளக்கம்-II

(C) Explanation III of Section 299
பிரிவு 299 விளக்கம்-III

(D) Explanation IV of Section 300
பிரிவு 300 விளக்கம்-IV

23. The doctrine of 'transfer of malice' is contained under I.P.C
"மாற்றீடு செய்யப்பட்ட கெட்ட எண்ணம்" என்ற கோட்பாடு இ.த.ச. வின் எந்தபிரிவில் உள்ளடக்கியுள்ளது

(A) Section 299
பிரிவு 299

(B) Section 301
பிரிவு 301

(C) Section 304 A
பிரிவு 304 A

(D) Section 300
பிரிவு 300

24. 'A' kills 'C' thinking 'C' is 'B'. A is guilty of offence punishable under section
'A'–'B' என நினைத்து 'C' யை கொன்று விடுகிறார். 'A' செய்த குற்றம் இ.த.ச.வின் ―――――― பிரிவின் கீழ் குற்றம்

(A) 301
(B) 304 Part – I
(C) 302
(D) 304 Part – II

25. Wife of 'A', Committed suicide after 2 years of her marriage and before her death she was subjected to cruelty and harassment by 'A's Girl friend 'S' for demand of dowry. 'S' have committed offence under section ―――――― I.P.C.
'A' ன் மனைவி திருமணமாகி 2 ஆண்டு கழித்து தற்கொலை செய்து கொள்கிறார். அவர் மரணிப்பதற்கு முன் அவள் வரதட்சணை கேட்டு 'A' ன் பெண் தோழி 'S' ஆல் கொடுமைபடுத்தப்பட்டுள்ளார். 'S' இழைத்த குற்றம் என்ன? இ.த.ச. பிரிவு ―――――― ன் கீழ்.

(A) 302
(B) 304
(C) 498 A
(D) 304 B

26. The offence of "attempt to commit culpable homicide" is punishable under which of the following section of I.P.C
கொலையாகாத மரணம் விளைவிக்கும் செய்கையை செய்ய முயற்சிப்பது இ.த.ச.வின் எந்த பிரிவின் கீழ் குற்றமாகும்?

(A) 304
(B) 308
(C) 310
(D) 301

27. Which section of the I.P.C. has defined 'thug'?
'தக்கர்கள்' குறித்து இ.த.ச.வில் வரையறை செய்துள்ள சட்ட வகையம்

(A) 311
(B) 310
(C) 312
(D) 234

28. 'A' throws acid on 'B' and cause grievous hurts to him. Under I.P.C. A is liable for minimum punishment of
'B' ன் மீது 'A' திராவகத்தை வீசி கொடுங்காயத்தை விளைவிக்கிறார் இ.த.ச. ப்படி குறைந்த பட்ச தண்டணை எத்தனை ஆண்டுகள்

(A) 7 Years
7 ஆண்டுகள்

(B) 5 Years
5 ஆண்டுகள்

(C) 10 Years
10 ஆண்டுகள்

(D) 3 Years
3 ஆண்டுகள்

29. Which of the following is an offence under the Indian penal Code?
கீழ்கண்ட எந்த ஒன்று இ.த.ச.வின் கீழ் தண்டனைக்குரிய குற்றம்?

(A) Purchasing Acid
திராவகத்தை வாங்குவது

(B) Throwing act on a person with the intention of disfiguring
முகத்தை சிதைக்கும் எண்ணத்துடன் அமிலத்தை வீசுவது

(C) Selling Acid
திராவகத்தை விற்பது

(D) Manufacturing Acid
திராவகத்தை உற்பத்தி செய்வது

30. Punishment for wrongful restraint is
முறையற்ற தடுத்து வைத்தல் குற்றத்திற்கான தண்டனை

(A) Only simple imprisonment
சாதாரண சிறை தண்டனை மட்டும்

(B) Only rigorous imprisonment
இடுங்காவல் சிறை தண்டனை மட்டும்

(C) Both (a) and (b)
(a) மற்றும் (b) இரண்டும்

(D) None of the above
மேற்கண்ட எதுவுமில்லை

31. Assault cannot be caused by
தாக்குதல் என்பது ———— மட்டும் முடியாது

(A) Mere words
வெறும் வார்த்தைகளால்

(B) Mere Gestures
வெறும் சைகைகளால்

(C) Mere preparation
தயார்படுத்துதல் மூலம்

(D) All the above
மேற்கண்ட எல்லாம்

32. "Voyeurism" is punishable under section of ___________ of I.P.C.
"பாலியல் ரீதியான தொந்தரவு" என்ற குற்றம் இ.த.ச.வின் எந்த வகையத்தின் கீழ் குற்றம்.

(A) 354 A
(B) 354 B
(C) 354 C
(D) 376 A

33. The offence of "Stalking" is punishable under section ___________ of I.P.C.
"பின்தொடர்தல்" என்ற குற்றம் இ.த.ச. ————— பிரிவின் கீழ் குற்றம்

(A) 354 A
(B) 354 B
(C) 354 C
(D) 354 D

34. Any man who monitors the use by a woman of internet, email or any other form of electronic communication commits the offence of
பெண்களை, இணையதளம், மின்னஞ்சல் அல்லது ஏதாவதொரு மின்னணு தொடர்பு சாதனங்கள் மூலம் கண்காணிப்பது என்பது ————— குற்றமாகும்

(A) Voyeurism
பாலியல் ரீதியிலான தொந்தரவு

(B) Stalking
பின்தொடர்வு

(C) Sexual harassment
பாலியல் கொடுமை

(D) Assault
தாக்குதல்

35. How many types of kidnapping are there under the I.P.C.?
எத்தனை விதமான பிள்ளைப்பிடித்தல் இ.த.ச.வில் சுட்டி காட்டப்பட்டுள்ளது

(A) Four
நான்கு

(B) Two
இரண்டு

(C) Three
மூன்று

(D) None of the above
மேற்கண்ட எதுவுமில்லை

36. In kidnapping consent of minor is
பிள்ளைப்பிடித்தல் குற்றத்தில் இசைவு என்பது

(A) Wholly immaterial
முழுவதும் தொடர்பற்றது

(B) Partly immaterial
பகுதி தொடர்பற்றது

(C) Wholly material
முழுவதும் தொடர்புடையது

(D) Partly material
பகுதி தொடர்புடையது

37. 'A' is 17 years old daughter of 'B', C without consent of 'B' takes A for a tour of North India, C has committed the offence of
'A' என்பவர் 'B ன் 17 வயது மகள் C.B யின் இசைவின்றி A யை வட இந்திய சுற்றுலா அழைத்துச் செல்கிறார். 'C' செய்த குற்றமானது

(A) Kidnapping
பிள்ளைபிடித்தல்

(B) Abduction
ஆட்கடத்தல்

(C) Wrongful confinement
முறையின்றி சிறைவைத்தல்

(D) Wrongful restraint
முறையின்றி தடுத்துவைத்தல்

38. Abduction can be committed against
ஆட்கடத்தல் என்பது யாருக்கு எதிராக இழைக்கப்படும்

(A) A person of any age
எந்த வயதுடைய நபருக்கு

(B) A male (or) female person below 16 years
ஆண்/பெண்/16 வயதுக்கு குறைவானவர்கள்

(C) Women only
பெண்களுக்கு எதிராக மட்டுமே

(D) None of the above
மேற்கண்ட எதுவுமில்லை

39. The offence of section 361 I.P.C. is basically against
இ.த.ச. பிரிவு 361 ன் கீழான குற்றம் யாருக்கு எதிரானது?

(A) Family
குடும்பம்

(B) Society
சமூகம்

(C) Any person
எந்தவொரு நபர்க்கும்

(D) Lawful Guardian
சட்டபூர்வ பாதுகாவலர்

40. Which of the following is an offence of continuing under I.P.C.?
இ.த.ச. வின் கீழ்க்காணும் எந்தவொரு குற்றம் தொடர் குற்றமாக கருதப்படும்

(A) Rape
வன்புணர்வு

(B) Theft
திருட்டு

(C) Abetment
குற்ற உடந்தை

(D) Abduction
ஆட்கடத்தல்

41. Under the Indian Penal Code – 1860 the criminal law (Amendment) Act – 2013 has
குற்றவியல் திருத்தச் சட்டம்-2013 ஆனது இந்திய தண்டனைச் சட்டத்தில்

(A) Amended Section 375
பிரிவு 375 திருத்தியது

(B) Substituted Section 375
பிரிவு 375 ஐ மாற்றீடு செய்தது

(C) Abolished Section 375
பிரிவு 375 ஐ நீக்கியது

(D) Weakened Section 375
பிரிவு 375 ஐ தளர்வுறச் செய்தது

42. A man is said to commit rape if he has sexual intercourse with a women with or without her consent. If her age is below ________ years of age
ஓர் பெண்ணின் இசைவுடனோ அல்லது இசைவின்றியோ உடலுறவு கொள்ளுதல். எந்த வயதுக்கு கீழான பெண்ணுடன் நடந்தால் அது வன்புணர்வாக கருதப்படும்

(A) 16
(B) 14
(C) 15
(D) 18

43. Sexual intercourse with the consent of a girl amounts to rape if she is under
எத்தனை வயதுக்கு குறைவான பெண்ணுடன் அவளின் இசைவுடன் உடலுறவு நிகழ்த்தப்பட்டாலும் வன்புணர்வாக கருதப்படும்

(A) 16 years
16 வயது

(B) 15 years
15 வயது

(C) 17 years
17 வயது

(D) 18 years
18 வயது

44. As per I.P.C. gang rape is punished under
இ.த.ச. பிரிவு-ன் படி கூட்டுபாலியல் வன்புணர்வு என்பது

(A) 376 A
(B) 376 C
(C) 376 D
(D) 376 E

45. Maximum punishment for Gang-Rape under 376 – D of IPC
இ.த.ச. பிரிவு 376-D ன் படி கூட்டு பாலியல் வன்புணர்வுக்கு அதிகபட்ச தண்டனை

(A) 10 years
10 வருடங்கள்

(B) 20 years
20 வருடங்கள்

(C) Imprisonment for life
ஆயுட்கால சிறை

(D) Punished with Death
மரண தண்டணை

46. Which of the following is not "Grievous Hurt"?
"கொடுங்காயம்" என்ற வகைபாட்டின் கீழ் வராத குற்றம் எது.

(A) Permanent privation of the hearing of either ear
இரண்டில் ஒரு காதை கேட்காமல் செய்வது

(B) Dislocation of a tooth
பல்லை இடமாற்றம் செய்வது

(C) Emasculation
ஆண்மையை இழக்கச் செய்வது

(D) Any hurt which causes the sufferer bodily pain for ten days
10 நாட்களுக்கு மேல் உடல் வலியை ஏற்படுத்தும் காயம்

47. Which kind of hurt is not a grievous hurt?
எந்தவிதமான காயம் கொடுங்காயம் அல்ல

(A) Emasculation
ஆண்மையை இழக்கச் செய்தல்

(B) Privation of any member or Joint
உடல் உறுப்பு மற்றும் முட்டியை இழக்கச் செய்தல்

(C) Temporary disfiguration of the head or face
தற்காலிகமாக-முகத்தை/தலையை சிதைத்தல்

(D) Fracture or dislocation of tooth
பல்லை உடைப்பது மற்றும் இடமாற்றுவது

48. 'A' has knocked down two teeth of 'B'. A has committed the offence of
'A'-'B' ன் இரண்டு பல்லை உடைத்து விடுகிறார். 'A' இழைத்த குற்றம் என்ன?

(A) Grievous hurt
கொடுங்காயம்

(B) Simple hurt
சாதாரண காயம்

(C) Culpable homicide
மரணம் விளைவித்தல்

(D) Attempt to hurt
காயம் விளைவிக்கும் முயற்சி

49. Mithu Singh / VS / State of Punjab case relating to ___________ section of I.P.C.
மித்து சிங்/எதிர்/பஞ்சாப் அரசு வழக்கு தொடர்புடைய இ.த.ச. வகையம்

(A) 302
(B) 301
(C) 303
(D) 304 – B

50. The Doctrine of Rarest of rare case is relating to
அரிதினும் அறிதான வழக்கு கோட்பாடுடன் தொடர்புடையது

(A) Death penalty
மரண தண்டனை
(B) Life imprisonment
ஆயுட் சிறை
(C) Fine
அபராதம்
(D) Solitery confinement
தனிமைச் சிறை

51. Arrest of persons is covered under chapter ___________ of the code of Criminal Procedure – 1973.
ஓர் நபரைக் கைது செய்வது குறித்து 1973-குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் ———— அத்யாயத்தில் உள்ளடக்கியுள்ளது

(A) IV
(B) V
(C) VI
(D) III

52. When can police officer arrest a person without warrant?
எப்பொழுது காவல் அதிகாரி பிடியாணை இன்றி கைது செய்யலாம்

(A) In case of cognizable offence only
புலன் கொள்ளக்கூடிய குற்றங்களில்
(B) In case of proclaimed offender only
தேடப்படும் குற்றவாளியை
(C) Deserter from Armed forces only
ஆயுதப்படையில் இருந்து ஓடிவந்தவரை
(D) All the above
மேற்கண்ட எல்லாம்

53. Under which section of CrPC a Police officer can arrest a person without an order from a Magistrate and without warrant?
கு.வி.ந.ச.வின் எந்த பிரிவின் கீழ் காவலதிகாரி நடுவரின் உத்தரவின்றியோ அல்லது பிடியாணை இல்லாமலோ ஒரு நபரை கைது செய்ய இயலும்

(A) Section – 42
பிரிவு 42

(B) Section – 40
பிரிவு 40

(C) Section – 51
பிரிவு 51

(D) Section – 41
பிரிவு 41

54. A person can be arrested without warrant
ஒரு நபர் பிடியாணை இன்றி கைது செய்யப்படக்கூடிய சூழலானது

(A) As preventive or precautionary measure
முன்னெச்சரிக்கை மற்றும் குற்றதடுப்பு நடவடிக்கைகாக

(B) For obtaining correct name and address
சரியான பெயரும், முகவரியும் கொடுக்ககோரி

(C) For securing attendance of accused
குற்றம் சுமத்தப்பட்டவரின் தணிக்கைக்காக

(D) All the above
மேற்கண்ட எல்லாம்

55. Any private person may arrest without warrant
பிடியாணை இன்றி ஏதாவதொரு தனிநபர் கைது செய்ய கூடிய சூழல்

(A) Any person committing a cognizable offence
எவராகிலும் ஒருவர் புலன் கொள் குற்றத்தை செய்தால்

(B) Any proclaimed offender
தேடப்படும் குற்றவாளி எவராகிலும்

(C) Both (A) and (B)
மேற்கண்ட (A) மற்றும் (B)

(D) Private person cannot arrest any person without warrant
தனிநபர் பிடியாணை இன்றி எவரொருவரையும் கைதுசெய்தல் இயலாது

56. In under to arrest a person, who is reasonably suspected of being a deserter from any of the armed forces of the Union, the police officer shall take prior sanction from?
ஒன்றிய அரசின் ஆயுதப்படை ஒன்றிலிருந்து ஓடிவந்துவிட்டதாக சந்தேகிக்கிற நபர் ஒருவரை கைது செய்ய காவலதிகாரி முன் அனுமதி பெற வேண்டிய நபர்

(A) Commending officer of that person
தப்பியோடி நபரின் உயர் கட்டளை அதிகாரி

(B) State Government
மாநில அரசு

(C) Central Government
மைய அரசு

(D) None of the above
மேற்கண்ட எதுவுமில்லை

57. Procedure of arrest and duties of officer arresting the person have been provided in the code of criminal procedure – 1973 under section
கைது செய்யப்படும் நபருக்கு எதிராக காவல் அதிகாரி கைது செய்யப்படும் பொழுது கொண்டுள்ள கடமைகள் குறித்து குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973 ———— வகையத்தின் கீழ் கூறப்பட்டுள்ளது

(A) Section 41
பிரிவு 41

(B) Section 41 A
பிரிவு 41 A

(C) Section 41 B
பிரிவு 41 B

(D) Section 41 C
பிரிவு 41 C

58. Section 41 B was inserted in the Criminal Procedure Code by the Criminal Procedure Code (Amendment) Act in which of the following year?
பிரிவு 41 B ஆனது எந்த வருட குற்றவியல் நடைமுறை திருத்தச் சட்டப்படி இணைக்கப்பட்டது

(A) 2008
2008

(B) 2010
2010

(C) 2005
2005

(D) None of these
மேற்கண்ட எதுவுமில்லை

59. Under section '41 C' of CrPC State Government shall establish police control room
கு.வி.ந.ச பிரிவு '41C' ன் படி காவல் கட்டுபாட்டு அறையானது ———— ல் அமைக்கப்பட வேண்டும்

(A) Only at District Level
மாவட்ட அளவில் மட்டும்

(B) Only at State Level
மாநில அளவில் மட்டும்

(C) Only at Commissioner Level
காவல் ஆணையராக அளவில் மட்டும்

(D) At State and District Level
மாநில மற்றும் மாவட்ட அளவில்

60. Under which section of CrP.C. a Magistrate can arrest a person
கு.வி.ந.ச. எந்த பிரிவின் கீழ் நடுவர் ஒரு கைதை மேற்கொள்ள இயலும்

(A) 38
(B) 40
(C) 41
(D) 44

61. An arrest warrant in a Criminal Case shall be signed by
கைது செய்ய பிறப்பிக்கப்படும் பிடியாணையில் கையெழுத்திடுபவர்

(A) Chief Minister
முதலமைச்சர்

(B) Head of Office
அலுவலக தலைமை

(C) Presiding Officer of the Court
நீதிமன்றத்தை நடுத்தும் அதிகாரி

(D) Authorized Police Officer
அதிகாரம் வழங்கப்பட்ட காவலதிகாரி

62. Summons issued by a court under the code of Criminal Procedure – 1973 must be
அழைப்பாணைகளை 1973 குற்றவியல் நடைமுறைச் சட்டப்படி வழங்குகையில் அது ———— கண்டிப்பாக இருக்க வேண்டும்

(A) In writing
எழுத்தில்

(B) In duplicate
இரண்டு படிகளாக

(C) Both (A) and (B)
(A) மற்றும் (B) இரண்டும்

(D) In writing duplicate and signed by the presiding officer of such court
எழுத்தில் இரண்டு படிகாக இருப்பதுடன் சம்பந்தபட்ட நீதிமன்ற அதிகாரியின் கையொப்பத்துடன்

63. Which of the following is process to compel the appearance of persons before the Criminal Courts?
கீழ்கண்டவற்றில் எந்த நடைமுறைக்காக ஒரு நபரை கட்டாயமாக குற்றவியல் நீதி மன்றத்திற்கு அழைக்க இயலும்

(A) Summons
அழைப்பாணை

(B) Warrants
பிடியாணை

(C) Attachment and Sale of Property
சொத்து கைபற்றுகை மற்றும் விற்பனை

(D) All the above
மேற்கண்ட எல்லாம்

64. How long a warrant of arrest shall remain in force?
எத்தனை காலம் பிடியாணை அமுலில் இருக்கும்,

(A) 6 years
6 வருடங்கள்

(B) 10 years
10 வருடங்கள்

(C) 12 years
12 வருடங்கள்

(D) Until executed or cancelled
பிடியாணை நிறைவேற்றப்படும்வரை அல்லது ரத்து செய்யப்படும் வரை

65. Summons of court can be served by
அழைப்பாணைகளை சார்பு செய்வது

(A) Only a Police Officer
காவலதிகாரி மட்டும்

(B) An Officer of the Court
நீதிமன்ற அதிகாரி

(C) Public Servant
பொது அலுவலர்

(D) Any of them
மேற்கண்ட எவர்ரொருவரும்

66. An arrest warrant issued by a court can be executed at
ஓர் நீதிமன்றம் வழங்கிய பிடியாணையை நிறைவேற்றுவது

(A) Any place of the State
மாநிலத்தின் எந்தவொரு இடத்திலும்

(B) Any place of India
இந்தியாவின் எந்தவொரு இடத்திலும்

(C) Any place under the jurisdiction of the Court
நீதிமன்ற பரவெல்லை அமைந்த எந்தவொரு இடத்திலும்

(D) Any place in the District
மாவட்டத்தின் எந்தவொரு இடத்திலும்

67. Which one of the following groups of sections of Cr.P.C. deals with proclamation and attachment section __________ to __________
கீழ்கண்ட கு.வி.ந.ச வகையங்கள் விளம்புகையையும் கைபற்றுகை செய்வதையும் கையாளுகின்ற பிரிவு __________ முதல் __________ வரை

(A) 88 – 85

(B) 82 – 86

(C) 82 – 90

(D) 80 – 86

68. Claims and objections to attachment of property is provided under which one of the following sections of the Cr.P.C.?
சொத்தை கைப்பற்றுகை செய்து மற்றும் இணைப்பதற்கு எதிராக கருத்து கூறவும், எதிரிடை உரிமை கோரவும் கு.வி.ந.ச. வின் எந்த பிரிவு உரிமை அளிக்கிறது

(A) 84

(B) 85

(C) 86

(D) 87

69. The word wife means
கு.வி.ந.ச. பிரிவு 125 ன் கீழ் மனைவி என்பது

(i) Legally wedded wife
முறைப்படி திருமணம் செய்து கொண்டவள்

(ii) Wife separated from her husband under judicial separation
நீதிமனற் விலகி இருப்பின் கீழ் தனித்திருக்கும் மனைவி

(iii) A divorced wife not remarried
மணவிலக்கு பெற்று மறுமணம் செய்து கொள்ளாதவள்

(iv) A divorced wife who has remarried
மணவிலக்கு பெற்று மறுமணம் செய்துகொண்டவள்

(A) (i), (ii), (iii)
(B) (i), (ii)
(C) (i), (ii), (iii), (iv)
(D) (i), (iii)

70. Who is not entitled to any maintenance under chapter IX of Cr.P.C.?
கு.வி.ந.ச. அத்யாயம் IX ன் கீழ் வாழ்க்கை பொருளதிபெற இயலாதவர்கள்

(A) Divorced wife
மணவிலக்கு பெற்ற மனைவி

(B) Judicially separated wife
தனித்திருக்கும் மனைவி

(C) Illegal child
சட்டபூர்வமற்ற முறையில் பிறந்த குழந்தைகள்

(D) Physically and Mentally able adult son
உடலும், உள்ளமும் நிறைவாக இருக்க கூடிய வயதுக்கு வந்த மகன்

71. Under which section of the code of criminal procedure 1973, a District Magistrate or Sub-Divisional Magistrate may prevent environmental pollution section
குற்றவியல் நடைமுறைச்சட்டம்-1973 ன் எந்த பிரிவின் கீழ் மாவட்ட நடுவர் அல்லது சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் சுற்றுசூழல் பாதிப்பை தடுக்க வழிவகை செய்கிறது பிரிவு

(A) 151
(B) 133
(C) 145
(D) 107

72. A magistrate has power to deal with urgent cases of apprehended danger or nuisance under section
ஓர் நடுவர் அவசரமாக ஓர் தொல்லை குறித்த அல்லது அபாயம் தரக்கூடிய அளவில் இருக்க கூடிய வழக்கை கையாள அதிகாரமளிக்கும் பிரிவு

(A) 133 Cr.P.C.
133 கு.வி.ந.ச.

(B) 144 Cr.P.C.
144 கு.வி.ந.ச.

(C) 145 Cr.P.C.
145 கு.வி.ந.ச.

(D) 107 Cr.P.C.
107 கு.வி.ந.ச.

73. Under what section of Cr.P.C. a magistrate may direct local investigation section ____________ Cr.P.C.?
கு.வி.ந.ச. வின் எந்த பிரிவு நடுவர் தமக்குட்பட்ட அளவில் புலன் விசாரணைக்கு உத்தரவிடலாம் பிரிவு ———— கு.வி.ந.ச.

(A) 139
(B) 133
(C) 145
(D) 147

74. Which section of the Code of Criminal Procedure 1973, has deals with power of High Courts to commit the sentence of death to life imprisonment on pregnant woman?
கு.வி.ந.ச.-1973 ன் எந்த பிரிவு கருவுற்றுள்ள பெண்ணின் மரணதண்டணையை ஆயுள் தண்டணையாக குறைக்க வழிவகை செய்ய அதிகாரமளித்துள்ளது

(A) 416
(B) 411
(C) 417
(D) 420

75. The power to postpone the execution of death sentence is conferred on
மரண தண்டணை நிறைவேற்றத்தை தள்ளி வைக்கும் அதிகாரம் முடையது

(A) The court of session
அமர்வு நீதிமன்றம்

(B) The court of Judicial Magistrate
குற்றவியல் நடுவர் நீதிமன்றம்

(C) The High court
உயர்நீதிமன்றம்

(D) The Court of District Magistrate
மாவட்ட நடுவர் நீதிமன்றம்

76. Under section 428 Cr.P.C. the period of detention undergone by a convict cannot be set-off during
கு.வி.ந.ச. பிரிவு 428 ன் கீழ் தண்டனை பெற்ற காலத்திற்கு ஈடாக காவலிருப்பில் இருந்த காலத்தை சரியீடு செய்ய இயலாத சூழல் என்பது

(A) Investigation of the case
புலன் விசாரணையில் இருந்த வழக்கை

(B) Trial of the case
நீதிமன்ற விசாரணையில் இருந்த வழக்கை

(C) Enquiry of the case
விசாரணையில் இருந்த வழக்காக

(D) Another case
மற்றுமொரு வழக்காக

77. Cash in lieu of surety bond can be permitted vide
பிணைபத்திரத்திற்கு பதிலியாக பணம் பெற்றுக்கொள்ள அனுமதிக்கும் பிரிவு

(A) 443 Cr.P.C.
443 கு.வி.ந.ச.

(B) 444 Cr.P.C.
444 கு.வி.ந.ச.

(C) 445 Cr.P.C.
445 கு.வி.ந.ச.

(D) 446 Cr.P.C.
446 கு.வி.ந.ச.

78. Order passed under section 451 Cr.P.C. is
கு.வி.ந.ச. பிரிவு 451 ன் படி பிறப்பிக்கப்படக் கூடிய ஆணை

(A) An Interlocutory Order
இடைக்கால ஆணை

(B) A Final Order
இறுதி ஆணை

(C) Both (A) and (B)
மேற்கண்ட (A) மற்றும் (B)

(D) None of the above
மேற்கண்ட எதுவுமில்லை

79. Under criminal procedure code 1973, what is effect of trial conducted in wrong place
தவறான இடத்தில் நீதிமன்ற விசாரணை நடைபெற்றால் 1973 குற்றவியல் நடைமுறைச் சட்டப்படி அது

(A) Vitiate itself
அதுவே தவறு

(B) Vitiate if caused failure of Justice
நீதிவழங்குவதை தடைசெய்ய அது காரணமாகும்

(C) Seriousness has to be seen
கடுமையாக எடுத்துக்கொள்ளப்படவேண்டிவரும்

(D) Is to be refereed to Session Judge
இது குறித்த அமர்வு நீதிமன்றத்திற்கு முன்னிட வேண்டும்

80. Under Criminal Procedure Code – 1973 the irregularities which do not vitiate proceedings have been stated in ____________ section.
1973 குற்றவியல் நடைமுறைச்சட்டம்-படி- சீரற்ற நடவடிக்கைகள் நீதிமன்ற நடைமுறைகளை பாதிக்காது என கூறுவது ———— பிரிவு ஆகும்

(A) 460
(B) 461
(C) 462
(D) 466

81. Indian Evidence Act was drafted by
இந்திய சாட்சிய சட்டத்தை எழுதியவர்

(A) Lord Macauley
லார்டு மெக்காலே
(B) Sir James F. Stephan
சர் ஜேம்ஸ் F. ஸ்டீபன்
(C) Huxley
ஹக்லீ
(D) Sir. D.F. Mulla
சர். D.F. முல்லா

82. Which of the following section provides that evidence may be given of facts in issue?
கீழ்க்கண்டவற்றுள் எந்த பிரிவு பிரச்சனைக்குள்ளான பொருண்மை குறித்து கூறுகிறது

(A) Section – 3
பிரிவு-3
(B) Section – 4
பிரிவு-4
(C) Section – 5
பிரிவு-5
(D) Section – 6
பிரிவு-6

83. Facts forming part of the Same Transaction are known as
ஓர் செய்கையின் பகுதியாக ஒன்றி அமைகிற செய்கை

(A) Plea of Alibi
வேற்றிட வாதம்
(B) Dying Declaration
மரண வாக்குமூலம்
(C) Admission
ஏற்புரை
(D) Res – Gestae
ரெஸ்-கேஸ்ட்டீ

84. Under the law of evidence the relevant fact
சாட்சிய சட்டத்தின் கீழ் தொடர்புடைய பொருண்மை என்பது

(A) Must be logically relevant
தர்க்கவியலின் அடிப்படையில் தொடர்புடையது

(B) Must be legally relevant
சட்டபூர்வமாக தொடர்புடையது

(C) Must be logically and legally relevant
சட்டபூர்வமாகவும், தர்க்கவியல் ரீதியாகவும் தொடர்புடையது

(D) Must be legally and logically relevant and admissible
சட்டபூர்வமாகவும், தர்க்கவியல் ரீதியலாகவும் தொடர்புடையது மற்றும் எற்றுக்கொள்ளதக்கது

85. Rule of "Res Gestae" which is the facts in issue is discussed in section ________ I.E.A.
"ரெஸ் கேஸ்ட்டீ" என்ற பிரட்சனைக்கான பொருமை விளக்கப்பட்டுள்ள பிரிவு ________ இ.சா.ச.

(A) 6
(B) 7
(C) 8
(D) 5

86. Under which section of the Indian Evidence Act, admissibility of evidence shall be decided by the Judge?
கீழ்க்கண்ட இந்திய சாட்சிய சட்டத்தின் எந்த பிரிவின் கீழ் சாட்சிகளின் ஏற்ப்பு தன்மை குறித்து முடிவு செய்ய நீதிபதி அதிகாரம் பெறுகிறார்

(A) 135
(B) 136
(C) 137
(D) 138

87. A leading question is permissible only in
பதில்பொதி வினாக்கள் ________ ல் மற்றுமே அனுமதிக்கதக்கது

(A) Examination in Chief
முதன்மை விசாரணை

(B) Cross Examination
குறுக்கு விசாரணை

(C) Re – Examination
மறு விசாரணை

(D) All the above
மேற்கண்ட எல்லா நிகழ்விலும்

88. Under section 146 of the Indian Evidence Act, which of questions cannot be asked during Cross Examination?
இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 146 ன் கீழ் குறுக்கு விசாரணையின் பொழுது எழுப்பக்கூடாத கேள்வி ?

(A) To test the veracity of witness
சாட்சியின் நம்பகத்தன்மை சோதிப்பது

(B) To discover the witness position in life
வாழ்க்கையின் தரம் சாட்சியின்

(C) To shake credit of witness
சாட்சியின் மதிப்பை உரசிப்பார்ப்பது

(D) Previous sexual experience of victims of offence of rape
வன்புணர்வு குற்றத்தில் பாதிக்கப்பட்டவரின் முந்தைய பாலியல் ஒழுக்கம் குறித்த கேள்வி

89. When can prosecution be allowed to ask loading question to its own witness?
எப்பொழுது குற்றதொடர்வு அமைப்பு தனது சான்றுரையரையே பொருள் பொதி வினாக்கள் கேட்க அனுமதிக்கப்படும்

(A) In – examination in chief
முதன்மை விசாரணை

(B) In re – examination
மறு முதல் விசாரணை

(C) When the witness is declared hostile
சான்றுரையர் பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டபின்

(D) In all circumstances
மேற்கண்ட எல்லா நேர்விலும்

90. The term "Examination in chief" has been defined in the Indian Evidence Act – 1872 in section
1872 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தில் முதன்மை விசாரணை வரையரை செய்யப்பட்ட பிரிவு

(A) 137 (B) 138

(C) 139 (D) 140

91. Find out the wrong match
தவறான பொருத்தத்தை கண்டறிக

(i) I.P.C. – 1972
இ.த.ச. - 1972

(ii) Indian Evidence Act – 1860
இந்திய சாட்சிய சட்டம் - 1860

(iii) Cr.P.C. – 1872 (New)
கு.வி.ந.ச-1872 (புதியது)

(A) (i) only
(i) மட்டும்

(B) (ii) only
(ii) மட்டும்

(C) (i), (ii), (iii)
(i), (ii), (iii)

(D) (iii) only
(iii) மட்டும்

92. Indian Penal Code shall extend to the
இந்திய தண்டணைச் சட்டம் ———— வரை பொருந்தும்

(A) Whole of India
இந்தியா முழுவதும்

(B) Whole of India except Jammu and Kashmir
ஜம்மு மற்றும் காஷ்மீர் தவிர்த்த இந்தியா முழுவதும்

(C) It is not extended to TamilNadu
தமிழ்நாட்டிற்கு பொருந்தாது

(D) Pondicheery Union teritory because it is a French Colony
பிரெஞ்சு யூனியன் பிரதேசமான பாண்டிசேரிக்கு பொருந்தாது

93. Chapter X of the Criminal Procedure Code – 1973 is not applicable to
குற்றவியல் நடைமுறைச் சட்டம் அத்யாயம் X ———— க்கு பொருந்தாது

(A) Nagaland
நாகலாந்து

(B) Manipur
மணிப்பூர்

(C) Sikkim
சிக்கிம்

(D) All the above States
மேற்கண்ட எல்லா மாநிலத்திற்கு

94. Chapter X of the Cr.P.C. shall not apply to
கு.வி.ந.ச அத்யாயம் X பொருந்தாத பகுதி

(A) Scheduled Caste Area
பட்டியல் சாதியினர் பகுதி

(B) Scheduled Tribes Area
பட்டியல் பழங்குடியினர் பகுதி

(C) Nomadic Tribes Area
அலைந்து திரியும் பழங்குடியினர் பகுதி

(D) Criminal Tribes Area
குற்றப் பழங்குடியினர் பகுதி

95. Find out the correct match
சரியான பொருத்தத்தை தேர்க

(i) Chapter – II of I.E.A. = Relevancy of fact
அத்யாயம்-II-இ.சா.ச = தொடர்புடைய பொருண்மை

(ii) Chapter – V of I.E.A = Fact in issue
அத்யாயம்-V-இ.சா.ச = பிரட்சனைக்குரிய பொருண்மை

(iii) Chapter – VII of I.E.A. = Fact in question
அத்யாயம்-VII-இ.சா.ச = கேள்விக்குள்ளான பொருண்மை

(A) (i) only correct
(i) மட்டும் சரி

(B) (ii) only correct
(ii) மட்டும் சரி

(C) (iii) only correct
(iii) மட்டும் சரி

(D) All the above
மேற்கண்ட எல்லாம் சரி

96. Criminal Procedure Code – 1973 extends to the whole of India by
குற்றவியல் நடைமுறைச் சட்டம்-1973 இந்தியா முழுமைக்கும் பொருந்துமாறு செய்தது

(A) Jammu and Kashmir Reorganisation Act
ஜம்மு மற்றும் காஷ்மீர் மறு சீரமைப்பு சட்டம்

(B) Criminal Laws (Amendment Act)
குற்றவியல் திருத்தச் சட்டம்

(C) West Bengal Act No : 24 of 1988
மேற்கு வங்காள சட்ட எண் 24/1988

(D) Punjab Act No.9 of 1978
பஞ்சாப் சட்டம்-எண் 9/1978

97. Magistrate have power to search for persons wrongfully confined under the provision of ____________ of Cr.P.C.
நடுவர்கள் தவறான முறையில் சிறை வைக்கப்பட்டவர்களை தேடக்கூடிய அதிகாரம் அளிக்கும் கு.வி.ந.ச. பிரிவு

(A) 96
(B) 97
(C) 98
(D) 99

98. Find out correct Answer under Cr.P.C.
குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்கீழ் சரியான விடையை காண்க.

(A) Chapter – V – Processes to Compel Appearance
அத்யாயம் V - கட்டாயமாக முன்னிலை ஆவதற்கான நடைமுறை
(B) Chapter – VI – Arrest of Persons
அத்யாயம் VI - நபரை கைது செய்தல்
(C) Chapter – XXXIV – Disposal of Property
அத்யாயம் XXXIV - சொத்தை தீர்வு செய்தல்
(D) Chapter – XXXV – Maintenance
அத்யாயம் XXXV - பராமரிப்பு

99. Rape is an offence against
வன்புணர்வு என்பது ———————— க்கு எதிரானது

(A) Young women
இளம் பெண்
(B) Girl child
பெண் குழந்தை
(C) Old women
வயதான பெண்மணி
(D) All the above
மேற்கண்ட அனைவருக்கும்

100. Attempt to rape is punishable under section ____________ of I.P.C.
வன்புணர்வு முயற்சி இ.த.ச.வின் ———————— பிரிவின் கீழ் குற்றம்

(A) 375
(B) 376
(C) 511
(D) 377